ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆறுமுக அரங்கமகா தேசிகர் அவர்களின் ஆசி நூல்**

13.01.2025

1. அருள் வடிவாக நின்று காத்தருளும்
ஆறுமுகப்பெருமானை தொழுதேற்றி
வரமென அரங்கமகா ஞானியர் யானும்
வழங்குவேன் அருளாசி தன்னை

2. குரோதி ஆண்டு சிலை திங்கள் முழுமதி நன்னாளில்
நாளதுவும் அரங்கன் என் அவதார தின
நன்னாளாம் நாட்டிடுவேன் இவை நன்னாளில்
நன்மை கருதியும் ஓங்காரக்குடிலின்

3. மேன்மை கருதியும் உயர் சீடர் மக்களாம்
என் மக்கள் அனைவருக்கும் பாதுகாப்பு கருதியும்
அரங்கன் யான் இந்தவித நன்னாளில்
அருளாசி தன்னை அன்பர்கட்கு

4. மகிழ்வுறவும் நிறைவுறவும் வேண்டி எடுத்துரைப்பேன்
உரைக்கவே இந்தவித நன்னாளில்
உயர்வாய் ஜோதியில் அரங்கன் யான்
அற்புதமாய் இறங்கி அன்பர்கட்கு

5. பெருங்காட்சி தந்தேன்
வந்த அன்பர்கள் படை
என் மக்கள் படையெண்ணி
மகிழ்ந்து அவரவர்க்கும்

6. பரிபூரண ஆசி அருளியுள்ளேன்
உள்ளபடி அருளமுதிலும் கலந்து
உயர் சுவையூட்டி அன்பர்கட்கு
மகா பலம் பொருந்தும் வண்ணம்

7. பேரருள் புரிந்துள்ளேன்
உள்ளபடி இந்த நன்னாளில்
உயர்வுற என் மக்கள்
அனைவருக்கும் அரங்கன் என்

8. பரிபூரண ஆசி உண்டு
ஆசி வழி இந்தவித நன்னாளில்

அரங்கன் என் குடில் வந்தணுகி
பூஜை கலந்தும் தொண்டில் நிரம்பியும்

9. தர்மத்தை காக்க பொருளுதவி செய்தும்
புண்ணிய பலம் வேண்டி காத்திருக்கும்
தொடர் தொண்டில் இணைந்திருக்கும்
அன்பர் படை அவரவர்க்கும் அரங்கன்

10. என் பரிபூரண ஆசி உண்டு
ஆசி தந்தேன் இந்திய தேச
இவ்வெல்லை தொண்டர்கட்கும்
மலேசியா புவியில் இருந்து வந்த

11. அன்பர் பெருமக்கட்கும்
அனைவருக்கும் அரங்கன் என்
பரிபூரண ஆசி உண்டு
இந்தவித நன்னாளில் அரங்கமகான்

12. யான் இன்னும் பேராற்றல்பட
உலகமெல்லாம் என் தவபலமும்
தர்மபலமும் அரங்கன் என்
சுத்தநெறி கொள்கையும் பரவ இருக்க

13. அன்பர் படைகள் எல்லாம்
மனதுள் அரங்கன் என்னை
எண்ணுகின்ற கணமெல்லாம்
யான் இறங்கி அருள் செய்து

14. அவர்கட்கு அதீத பலம் கூட்டி
என் கொள்கை பரப்பும்
தடத்தில் எல்லாம் நான்
பாதுகாப்பாய் இருந்து வழிநடத்துவேன்

15. அவர்கள் அனைவருக்கும்
வழிநடத்தி பயண பாதுகாப்போடு
மேலவர்கள் இடத்திலும் அந்த சூழலிலும்
பெரும் பாதுகாப்பு கூட்டி

16. அரங்கன் என் கொள்கை வளரவும்
அரங்கன் என் தர்மம் சிறக்கவும்
அரங்கன் என் தொண்டர் படைகளும் பாதுகாப்பாய்
மேன்மேலும் பெருகவும் வளரவும்

17. பேரற்புதம் நிகழ்த்துவேன்
இந்தவித ஆங்கில புத்தாண்டு முதல்
இனிதே அரங்கன் என் தர்மபலம்
இன்னும் கூடும் அளவற்ற கிளைசங்கங்கள்

18. மேன்மேலும் பெருகி அதீத
அன்பர் படைகள் கூடி
அகிலமெங்கும் அரங்கன்
என் நாமம் போற்றப்படும்

19. அரங்கன் என் தர்மமும் வளர்க்கப்படும்
அற்புதம்பட ஓங்காரக்குடிலின் பெருமை
உலகமெங்கும் உணர்த்தப்படும்
உலகமே வியந்து ஓங்காரக்குடில் நோக்கி

20. வந்து இனிதே மேலும்
தர்மத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்கும்
துணை நிற்க நேரும்
ஆற்றல்பட ஆளுமை மாந்தர்களும்

21. ஆற்றல்பட ஆளுமை மாந்தர்களும்
செல்வந்தர்களும் சீமான்களும்
அரங்கன் என் குடிலை நோக்கி தேடி வந்து
எந்தன் திருவடி பணிந்து இனிதே

22. என் ஜீவதடத்தில் ஞானமும்
பிறவா பேற்றுக்குண்டான பெருங்கதியும் அடைந்து
இனிதே இந்தவித அற்புதத்தை
அகிலமெங்கும் அடையச் செய்யும் வண்ணம்

23. ஆற்றல்பட கொள்கையாக எடுத்துச் சென்று
பரப்பவும் அரங்கன் யான்
அற்புதம் நிகழ்த்துவேன் ஆகவே
இந்தவித நன்னாளில் அரங்கன் யான்

24. பெரும் சக்தியாய் நிரம்பி
என் ஜீவதடத்திலும்
அரங்கன் யான் உள்ளிருந்து
இயக்கிய தடத்திலும்

25. பேராற்றல்பட உள்ளேன்
இந்த நன்னாளில் வந்து என்தடம்

கலந்து கொண்ட அன்பர்களெல்லாம்
தர்மத்தில் பொருளுதவி செய்வதோடு

26. உயர்வாக எந்தன் தசவகை
மேலான தீட்சையில்
அவரவர்கள் இயன்ற வண்ணம்
தீட்சை பலத்தை இனிதே

27. என் சீடனாம் ராம்குமார்
கரம்பட அரங்கன் யானே
வழங்குகின்ற மகா சூட்சும
தீட்சையை ஏற்று அன்பர்கள்

28. சக்தி பெருக்கம் கொள்ள
அரங்கன் யான் இன்று
அன்பர்கட்கு பாதுகாப்போடு கூடிய
அறிவுரை அருளாசியாகவும் வழங்கினேன்

29. ஆற்றல் பெருக அற்புதங்கள் கூடும்
அரங்கன் என் நாமம்
செப்புகின்ற இடமெல்லாம் இனிதே
மாற்றமும் வளர்ச்சியும் அதீத

30. ஆறுமுகப் பெருமான் வெளிப்படுகின்ற
உயர்வான மகா சூட்சுமங்களும்
உருவாகும் அரங்கன் யான்
அருளிய அருளாசி விளக்கம் முற்றும் முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி